பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

க. பொ. த. (உ. த.) மாணவர்கட்கு

''பரீட்சையை சிறப்புறச் செய்ய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்''

''Wish you all the best''

ஆசிரியர் :
R. சத்தியசீலன்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

A/L 89
நிலைமின்னியல்
Tue, Thu 2-30 p. m.
A/L 90
ஒளியியல்
Wed, Fri 4-15 p. m.
நடைபெறுகின்றன.
ஆசிரியர் ;
R. சத்தியசீலன்
இல.21, மணல்தரை லேன்,
கந்தர்மடம். (யாழ்.)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 07 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 07 ( 22 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 178

## பஸ்ஸை மறித்து சண்டித்தனம் செய்தவர் அபராதம் செலுத்தினர்!

யாழ்ப்பாணம் ஜூலை 22

சிவில் நிர்வாகம் இல்லை என்பதைச் சாதகமாகக் கொண்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸை மறித்துச் சண்டித்தனம் புரிந்ததாகக் கூறப்படும் ஒருவர் 3,625 ரூபாவை இழக்க நேரிட்டது: அது ஒருவகை அபராதமாகவும் அமைந்தது.

கடந்த வாரத்தில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:—

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று மட்டக்களப்புக்குசேவையில் ஈடுபட்டிருந்தது.

அப்போது சம்பந்தப்பட்ட நபர் போக்குவரத்துச் சபை பஸ்ஸை சாவகச்சேரியில் மறித்து சாரதி, நடத்துனர்களைத் தாக்கினாராம்.

இதனால் பஸ் கண்ணாடி ஒன்று சேதமடைந்ததுடன் பஸ் நடத்துனர் வைத்திருந்த 3; 200 ரூபாவும் காணமற்போனதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள் இந்திய அமைதிப் படையினரிடம் முறையிட்டனர். அதை அடுத்து அமைதிப் படையினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

விசாரணைகளின் போது தாக்குதல் நடத்

(6-ஆம் பக்கம் பார்க்க)

பூஸாவிலிருந்து வந்த வாலிபர் பெற்ற

## நிவாரணப் பணம் இறுதிச்சடங்கிற்கு!

மட்டக்களப்பு, ஜூலை 22

பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுதலையான வாலிபர் ஒருவர் கச்சேரி சென்று நிவாரணப் பணமாக இரண்டாயிரம் ரூபாவையும் பெற்றுக்கொண்டு வீடு திரும்பும் வழியில் வாகனம் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் பெற்ற நிவாரணப் பணம் அவரது இறுதிச் சடங்கிற்குப் பயன்படுத்தப்பட்டது.

இச்சம்பவம் அண்மையில் கொம்மாதுறையில் நடைபெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஜெயசீலன் (வயது 19) என்பவருக்கே இந்தப் பரிதாப முடிவு ஏற்பட்டது.

பூஸா முகாமிலிருந்து விடுதலையான

(6ஆம் பக்கம் பார்க்க)

தென் மாகாணத்தில்

## நிலக்கண்ணி வெடி முன்கூட்டியே வெடித்தது

### 6 மாகாண சபை உறுப்பினர் தப்பினர்

கொழும்பு, ஜூலை 22

தீவிரவாதிகள் வைத்த நிலக் கண்ணிவெடி முன்கூட்டியே வெடித்ததால் தென்மாகாண சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற மாகாண சபையின் ஆறு உறுப்பினர்கள் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை வெலிகம பொலீஸ் பகுதியில் கத்துறுப்பிட்டிய என்னுமிடத்தில் இடம்பெற்றது.

தீவிரவாதிகள் நிலத்தில் தரைக் கண்ணிவெடியைப் பொருத்திக் கொண்டிருந்ததைப் பொலீஸார் கண்டனர்.

உடனே அவர்களை நோக்கிப் பொலீஸார்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கொள்ளைப்பொருள்கள் மீட்பு என ரெலோ தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை22

அண்மைக்காலங்களில் கிளிநொச்சிப் பகுதியில் கொள்ளைகளில் ஈடுபட்ட சிலரை, தாம் கைது செய்து விசாரித்துள்ளதாக ரெலோ இயக்க கிளிநொச்சிக் கிளை அலுவலகம் அறிக்கைஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.–

பிடிபட்ட கொள்ளையர்கள்கொடுத்ததகவலை அடுத்து திருநகரில் இரண்டு வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல கொள்ளைப் பொருட்கள் மீட்கப் பட்டுள்ளன.

அவற்றில் தங்க நகைகள் மற்றும் வெளி நாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு புனரமைப்புக்கு 32 கோடி ரூபா

## அமெரிக்கா வழங்கியது

கொழும்பு, ஜூலை 22

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு, புனர்வாழ்வு வேலைகளுக்கு என்று யு. எஸ். எய்ட் (U. S. Aid) ஸ்தாபனம் புதிதாக ஒரு கோடி அமெரிக்க டாலரை (இலங்கை நாணயத்தில் சுமார் 32 கோடி ரூபாவை) இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

நன்கொடை வழங்குவது சம்பந்தமானஉடன்படிக்கை நேற்றுக் கொழும்பில் கைச்சாத்தானது.

அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் ஸ்பெயினும் திறைசேரிச் செயலாளர் திரு. சண்முகமும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் ஜயதிஸ்ஸ பண்டாரகொடவும் சமுகமளித்து இருந்தார்.

நன்கொடையின் ஒரு பகுதி வீடமைப்பு நீர்ப்பாசனத் திருத்த வேலைகள், தொழில், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கும்–

மற்றொரு பகுதி வீடுகளைத் திருத்துவதற்கு மாதம் 1,500 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கவும்–

பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

வீட்டுத் திருத்தவேலைகளுக்குத் தேவையான பொருள்களை வாங்க ''வவுச்சர்''களாகவும் ஒரு பகுதி ரொக்கமாகவும் இவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. [அ–எ]

## தேர்தல்கள் ஒத்திவைப்பு இல்லை

### நாடாளுமன்றத்தில் காமினி

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியன ஒத்திவைக்கப்படமாட்டா.

அமைச்சர் காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணைபற்றிய விவாதத்தில் அமைச்சர் பேசினார். அவர் மேலும் சொன்னதாவது:-

தீவிரவாதச் சம்பவங்களினால் நாட்டிற்கு நஷ்டமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தை இதற்காகக் கண்டிப்பவர்கள், மாற்று வழியைச் சமர்ப்பிக்கத் தவறி விடுகின்றார்கள்.

வடக்கு, தெற்குப் பகுதிகளில் நிலவும்தீவிரவாதத்தை ஒழிக்க நாட்டின் இரண்டு பெரும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதற்கான கால கட்டம் வந்து விட்டது.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (ஒ–எ)

## சிறையிலிருந்து வந்த யாழ் வாசிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம் ஜூலை 22

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தென் இலங்கை இராணுவத் தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத் தகவலை யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்டச் செயலாளருமான திரு. எம். பஞ்சலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டிற்கு முன் கைது செய்யப்பட்டோர் ஒரு பிரிவாகவும் அதன் பின் கைது செய்யப்பட்டோர் வேறு ஒரு பிரிவாகவும் கணக்கிடப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் தொடரும் தேடுதல் வேட்டை

ஒட்டுசுட்டான், ஜூலை22

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கி கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து தொடர்ச்சியாக மிகத் தீவிரமான தேடுதலில் இந்திய அமைதிப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பல கிராமங்களிலும், காட்டுப் பகுதிகளிலும், இந்தியத் துருப்புகள் பெரும் கூட்டம் கூட்டமாக மூலை முடுக்குகள் எங்கும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

முல்லைத்தீவிலிருந்து மாங்குளத்திற்கும் புளியங்குளத்திற்கும் இடையில் வாகனப் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

தேடுதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும்கிராமங்களில் வாழ்வோர் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் என்ன நடக்குமோ என்று பீதியுற்றுக் காணப்படுகின்றனர்.

தேடுதலின் போது பொது மக்கள் பலரும் தாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிலர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகியஇடங்களுக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை காட்டுப் பகுதிகளில் ஷெல் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருக்கின்றன.

ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து நோட்டம் இட்டுப் படையினருக்கு உதவுகின்றன. (ஒ–113)

முச்சந்தி முரளி



வடக்கு, கிழக்கு பகுதியளுக்கு அடிக்கடி நிதி ஒதுக்கிக் கொண்டுதான் இருக்கினம், ஆனால் அவை வந்தபாடாய்த் தெரியயில்லைப் பாருங்கோ... .!

## மாகாண சபை உறுப்பினரின் மனைவி கொலை!

கொழும்பு, ஜூலை. 22

தென் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் மனைவி நேற்று மாலை இனந்தெரியாத சிலரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென் மாகாண சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு திரு. ரஞ்சித்குமாரகே நேற்று மாலை தனது மனைவி சிசிலியா குமாரகேயுடன் காரில் வீடு திரும்பிக் கொண்டு இருந்த சமயத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

போத்தவல என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.(ஒ–எ)

### சுபநேரம்

22 7 – 1988
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 02 முதல் 07-32 வரை
ராகுகாலம்:
10-32 முதல் 12 02 வரை
அட்டமி நவமி
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

## தேர்தலில் போட்டியிட தடை!

இஸ்லாமபாத், ஜூலை 22

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஸியா உல் - ஹக் நேற்று செய்தியாளர் மத்தியில் அறிவித்தார். (ஒ–எ)

இந்தியாவில்

## முகாம்களுக்கு வெளியே தங்கியிருப்போர் இம்மாதம் திருப்பி அனுப்பப்படுவர்

சென்னை, ஜூலை 22

இந்தியாவில் முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட அகதி மக்களை இம்மாதம் ராமேஸ்வரத்தில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சி அலுவலகங்களில்பதிவுசெய்த இந்த அகதிகள் பயண ஆவணங்கள், அடையாள அட்டைகள் ஆகியவற்றுடன் மண்டபம் முகாமில் மறுவாழ்வு அலுவலகத்தில் இம்மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன் ஆஜராக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## யாழ் நகரை அதிர வைத்த குண்டுச்சத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை22

நேற்றிரவு 9 மணிக்குக்கேட்ட குண்டு வெடிப்பு சத்தம், யாழ் நகரை அதிர வைத்தது.

எங்கு குண்டு வெடித்தது என்பது பற்றியோ அதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தோ செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (ஒ)

## திருமலை நகரில் குண்டு வெடித்து ஐவர் உயிரிழப்பு

திருகோணமலை நகரில் மீன் சந்தைக்கு அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பொது மக்களும் ஒரு ஸ்ரீலங்கா ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்தனர்.

பன்னிரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் அவர்களில் ஒருவரான விஜயதாஸ கவலைக்கிடமான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது

உயிரிழந்த ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் சுனில் சாந்தா என்று அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்த பொதுமக்கள் யார் என்பது இச்செய்தி எழுதப்படும் வரை அடையாளம் காணப்படவில்லை என்றும் அறிவிக்கப் படுகிறது. (ஒ–எ)

## சிங்களவர் நடத்திய தாக்குதலில் 3 தமிழர் பலி!

கொழும்பு, ஜூலை 22

திருகோணமலையில் நேற்று சிங்களவர் நடத்திய தாக்குதலில் மூன்று தமிழர் உயிரிழந்தனர்.

அகதிகள் முகாம் ஒன்றில் தங்கியிருந்தவர்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமான முழு விவரங்களும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

திருகோணமலை நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்பட்டது. (ஒ–எ)

## விடுதலையான இளைஞருடன் இராணுவ அதிகாரிகள்

### திருமலையில் கலந்துரையாடல்

திருகோணமலை, ஜூலை22

பூஸா, பெலவத்தை ஆகிய முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட திருமலையைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களை அழைத்து இந்திய அமைதிப்படையின் கிழக்குப் பிராந்தியதளபதி மேஜர் ஜெனரல்ஜமீல்மொஹமத் திருமலை இணைப்பதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

அர்ச். மரியாள் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இளைஞர்கள் பலர் இதில் கலந்து கொண்டு தமது குறைபாடுகள் பற்றி எடுத்துக்கூறினர்.

கலந்துரையாடலின் போது இளைஞர்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு:–

★ புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பணமான 2000/-ரூபா முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சகலருக்கும் வழங்கப்பட வேண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Reconditioned Honda C-70, C-50, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No-16, கண்டி ரோட், யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) (5117)

பழைய முடிமார்க் இரட்டை பீலி ஓடுகள் 1500, நல்ல வேம்பு கதவு நிலை, யன்னல்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சுகலெக்ஷ்மி ஸ்ரோர்ஸ் மாட்டீன் ரோட், யாழ்ப்பாணம். (5373)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், Box Spring கட்டில், கட்டில் மெத்தைகள், Show Case அலுமாரி, மேசைகள் சிறிய பெரிய கபேட், கண்ணாடி மேசை, மகாராஜா ஹோல் செற், செற்றிகள் மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (செம்பற்றிக் சந்தியருகில்.) (5093)

### தளபாட விற்பனை

சில்லறைக் கடைக்குத் தேவையான அலுமாரி விருக்கை, மேசை, சில்லறைப் பெட்டி, தராசுபடி, கம்பிவலை ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மட்டும் தொடர்பு கொள்ளவும். சகல வியாபாரம் செய்யக் கூடிய கடையொன்றும் வாடகைக்கு உண்டு. கண்ணன் 595, ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (5379)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Upland Farm கூடிய விரைவில் அதிக நிறையாக வளர்ச்சி அடையக்கூடிய 'லோமான் (Lohmann)' பிறவுண் சேவல் 20 ஆம் திகதி புதன்கிழமையும், 23ஆம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: 9, கந்தையா லேன், (சூராவத்தை ரோட்) சுன்னாகம், புகையிரத நிலையத்திற்கு அண்மையில். (5359)

### ஒரு நாள் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் (SHETNA B-380) பேட்டுக் குஞ்சு, குறுகிய காலத்தில் கூடிய நிறை தரக்கூடிய சேவல் குஞ்சுகள், புரேய்லர் குஞ்சுகள் 22-7-88 இல் விநியோகிக்கப்படும். —R. S. K Farm: முருகபதி, உடுவில், குபேரன்ஸ்ரோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில். (4928)

## தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலத்தில் கணக்கு எழுதக் கூடிய (வருமான வரிக் கணக்குகள் உட்பட) கணக்காளர் (Book-Keeper) தேவை. பத்து வருட அனுபவம்வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கவும். 289, C/O உதயன் யாழ்ப்பாணம். (5377)

### அடையாள அட்டை தவறிவிட்டது

கந்தையா குணபாலசிங்கம் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை ஓட்டுமடம் கல்லுண்டாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்திற்கு அல்லது உதயன் யாழ்ப்பாணக் கந்தோரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கபடும். (5378)

### பெண் உதவியாளர் தேவை

வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையாற்ற ஒரு பெண் உதவியாளர் தேவை. G. C. E. - O/L ஆங்கிலத்துடன் சித்தி அடைந்தவர்கள் காலை அல்லது மாலை வேலை நேரத்தில் சந்திக்கவும். Dr. V. யோகநாதன் 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5376)

### மணமகள் தேவை

கனடாவில் பிரயாண முகவராக பணிபுரியும் யாழ் / இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய மணமகனுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நற்பண்புடைய, அழகிய ஓரளவு படித்த மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். மணமகள் கனடா செல்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். Photo, விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். முகவரி:- 287, C/o உதயன். (5367)

### Stewards தேவை

யாழ் / நகரில் அமைந்துள்ள 'Old Park Chinese Restaurant'' க்கு Stewards தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் தொடர்பு:- "Old Park ChinseRestaurant'' 207, Old Park Road, Jaffna" (C 5821)

### மேசன்மார் தேவை

மாடிவீடு கட்டுவதில் அனுபவம் உள்ள மேசன்மார்; கூலிமார் உடனே தேவைப்படுகின்றனர். தொடர்பு:- 21, முத்லாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். காலையில் - நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். (5365)

### சிங்கப்பூர் பணிப்பெண்

சிங்கப்பூர் உயர் உத்தியோகத்தர் குடும்பத்தில் குழந்தைகளுக்கு தமிழைக் கற்பித்தும் வீட்டு வேலைகளையும் கவனிக்கக் கூடிய சுறுசுறுப்பான பெண் தேவை. ஓரளவு ஆங்கிலம் தெரிந்த தாதி (ஏழைப் பெண்) க்கு முன்னுரிமை. பாஸ் போட், ஆறு தற்போதைய நிழற் படங்களுடன் வருக. T. துரைசிங்கம், 376 (B) நாவலர் வீதி, அரியாலை யாழ்ப்பாணம். ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்னால். (5375)

## கல்வி

Air Conditioning Refrigeration Radio - TV வயறிங் வெல்டிங் மோட்டமெக்கானிசம் வைன்டிங் தட்டெழுத்து சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Viapa Engineering Aid Hall 328 நாவலர்ரோட் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். (5103)

### 88 Dec. English New Syllabus

ஆங்கிலம் புதிய பாடத்திற்கமைய நாலு மாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 27-7-88 நேரம் மாலை 6. 30-7.30 நாட்கள்: செவ்வாய், புதன், வியாழன், S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (5119)

### தொழில் நுட்ப பயிற்சி வகுப்புகள்

றேடியோ, ரீ. வி, டெக், குளிர்சாதனவியல் (Air Condition) பிளம்பிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் றிவைண்டிங், கட்டிடம் வரைதல், Spoken English பிரபல ஆசிரியர் குழுவினால் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. குறித்த அனுமதி பட்டும் வழங்கப்படும். மாணவர்களின் இன்றைய கலங்கரவிளக்கம் நெஸ்டா (Nesta) Nesta Technical Institute, 59.Station Road, Jaffna. (5083)

### போட்டிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 01-08-1988 காலை9-00மணிக்குநடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 25-07-1988 Modern Education Centre, Karaveddy. (4950)

### இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

### செங்கை ஆழியான் நாவல்கள்

மழைக்காலம், தீம் தரிகிடதித்தோம், கடல் கோட்டை, அக்கினிக் குஞ்சு, ஓ, அந்த அழகிய பழைய உலகம், கிடுகு வேலி, நடந்தாய் வாழி வழுக்கியாறு விற்பனையாகின்றன. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கிளிநொச்சியில் பிக்பென் / லங்கா புத்தகசாலைகள், (5105)

---

தரமான தெளிவான
## போட்டோஸ்ரட் பிரதிகளை
எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளவும்,
பழைய, புதிய
தமிழ், ஹிந்தி ஆங்கில வீடியோப் படப் பிரதிகளை
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்,
ஓடியோ, வீடியோ கசெற்றுக்களைப் பெற்றுக்கொள்ளவும்,
மிகத் தெளிவாக ஸ்டீரியோ முறையில் பாடல் பதிவுகளுக்கு
என்றும் உங்கள் நினைவில் நிற்க வேண்டிய பெயர்
# வீடியோ விஷன்
245, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(C 5901)

### பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். பொலிஸ் நிலையத்தில் சிவில் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. சி. மகேசன் உதவிப் பொலீஸ் சுப்ரின்டன் ஆக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (இ-10)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

26-7-1988 ஆம் திகதி ஆரம்பிக்க இருந்த இரண்டாம் தவணைக்குரிய கலைப்பீட விரிவுரைகள் 1-8-1988 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கலைப்பீடாதிபதி
(C 5902)

---

# A. V. M. இன் புதிய வீடியோ படம்
# "இது ஒரு மனிதனின் கதை"

நடிகர்கள்: ரகுவரன், சரத்பாபு, மாதுரி, மேனகா ஜெய்சங்கர், Y.G. மகேந்திரன்
கதை: சிவசங்கரி
இந்தியாவில் புகழ் பெற்ற வீடியோ படம்.
இன்றே உங்கள் பிரதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்
## வெளியீடு: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேஸ்)
## இல. 100,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C 5834]

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி லட்சுமிகாந்தன் விஸ்வப்பிரியா

சாவகச்சேரி சங்கத்தானை பசுபதியார் வீதியைச் சேர்ந்த லட்சுமிகாந்தன் -சகிலா தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியா இன்று (22-7-88) தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் மிக விமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தை, மாமா, பெரியப்பா, அன்ரி, சித்தி, மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென்று அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

(5258)

---

சில்லாலை
## புனித யாகப்பர் ஆலய
# வருடாந்த திருவிழா

கடந்த (16-07-88) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலை 6 மணிக்கு திருப்பலியுடன் நவ நாட்கள் நடைபெற்று வருகின்றன.

**புனிதரின் தேர்ப்பவனியும் நற்கருணை ஆராதனையும்**
**24-07-88 ஞாயிறு மாலை 4.30 மணி**

**திருவிழாத் திருப்பலி: 25-07-88**
திங்கள் காலை 7.00 மணி
திருவிழாத்திருப்பலி
**அருட்திரு பி. எவ். பொனிபஸ்**
தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

பக்தர்களே! இவ்விழாவில் ஒன்றுகூடி ''பரமனை நோக்கிப் பண்பாடுங்கள், புனிதரை நோக்கி வரம் கேளுங்கள்''
**25-07-88 இல் புனித யாகப்பர் பேராலான நல்விருந்தில் பங்குகொண்டு மகிழுங்கள்.**
யாத்திரிகர்களுக்கு ஏற்ற வசதி உண்டு.

– பங்கு மக்கள் –
(5265)

---

# 4வது ஆண்டு அஞ்சலி



### து. பஞ்சலிங்கம்
(மனோ மாஸ்டர்)

மலர்வு: 9 - 4 - 1956
உதிர்வு: 22 - 7 - 1984

நாம் அழுவதற்கு வரவில்லை
நமது மண்ணில் வேண்டாத்தனமாய்
இரத்தம்! இரத்தம்! — என்றாலும்
நாம் அழுவதற்கு வரவில்லை
கொலைக் கருவிகளை பூஜிக்க மறுத்ததினால்
இவன் மரணித்த வரலாறு
இன்னும் மாறவில்லை
விடுதலைத் தீபம் ஏந்திய விழிகள் பல
இன்னும் வீதியில் மிதிபடுகின்றன.
என்றாலும் —
நாம் அழுவதற்கு வரவில்லை
ஏனென்றால்—
மரணத்தின் வீதியில் நாம்
மௌனமாக நடக்கின்றோம்
வீதிஓரங்களில் விடுதலை
தேடியவர்கள்
வினோதமாய் மனித இறைச்சி தந்து
விடுதலை தேடுகிறவர்கள்
போராளிகளின்
கல்லறை மறைவில்
விடுதலையை சிறைவைத்தவர்கள்
எலும்புத் துண்டங்களில்
ஏறிநின்று-எக்காளமிடுகிறார்கள்
விடுதலை! விடுதலை!
இந்த அக்கிரமத்துக்கு
ஆணையிட்டவர்களை
அடையாளம் காணவிட்டால்
இறுதியில் உங்கள்
கண்ணீர் அஞ்சலி
விடுதலைக்கே.

உறவினர், ஊர்மக்கள், நண்பர்கள்

கொம்மந்தறை
வல்வெட்டித்துறை. (5263)

---

# DIPLOMA IN NURSING

9ஆம் பிரிவுக்கான
புதிய தாதிப் பயிற்சி நெறி

**ஆரம்பம்: 27 - 7 - 1988**

அரசாங்க தகுதிபெற்ற மருந்தாளர், தாதியர், பல்கலைக்கழக வைத்தியர் அடங்கிய விரிவுரையாளர் குழு.

மேலதிக விபரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St.Peters Lane,
JAFFNA.
(C-5879)

---

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

# A/L 90

இரசாயனவியல் பௌதிகவியல்

**20-07-88 ஆரம்பமாகிவிட்டது**

புதன், வெள்ளி வகுப்புக்கள்:
3-00 p. m. PHYSICS
By திரு. சோதிலிங்கம்
4-00 p. m. CHEMISTRY
By திரு. மதுரமணி

விசேட இரசாயனவியல் வகுப்பு
By திரு. சண்முகசுந்தரம்
25-07 88 (திங்கள்) ஆரம்பம்.
(C-5897)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருப்பூங்குடி
### வீ. வீ. கே. ஆறுமுகம்

1988-06-22இல் லண்டன் மாநகரில் சிவபதமடைந்த ஆசிரியப் பெருந்தகை, கதாகாலட்சேப வில்லிசைக் கலைஞர், யாழ். வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான வித்துவசிரோன்மணி, அன்புக்கடல் வீ. வீ. கே. ஆறுமுகம் அவர்களின் பூதவுடல் லண்டனில் தகனஞ் செய்யப்பட்ட நாளான 1988-7-13 அன்று அன்னாது புங்குடுதீவு-12, 'அளகாபுரி' இல்லத்தில் நினைவஞ்சலியொன்று நடைபெற்றது.

1988-7-22 ஆம் தேதியன்று அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், குருபூசையும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனைகளும் குறித்த 'அளகாபுரி' இல்லத்தில் நடைபெறுவதோடு ஆலயங்களில் மோட்சார்ச்சனைகளும் நிறைவேற்றப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

ஓம் சாந்தி!

வி. சி. குழந்தைவேலு
சகோதரர்.

புங்குடுதீவு-12 (5266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி கயரோக ஆஸ்பத்திரிக்கு வைத்திய பொறுப்பதிகாரி இல்லை

காங்கேசன்துறை, ஜூலை 22

வடக்கு - கிழக்கு மகாணங்களுக்கு ஒரே ஒரு கயரோக நிவாரண வைத்தியசாலையாக விளங்கும் மயிலிட்டி கயரோக நிவாரண வைத்திய சாலையில் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதே சமயம் வைத்திய பொறுப்பதிகாரி இல்லாதது பெரும் குறையாக உள்ளது. ஆகவே தொண்டர் வைத்தியர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை வலி-காமம் வடக்கு கயரோக நிவாரண சங்கம் யாழ் - செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுத்துள்ளது.

கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இருந்தவர் தம் கடமைகளை ஒப்படைக்காது, வைத்தியசாலைக்கு வராமல் தொடர்ந்து தம் சம்பளத்தை யாழ் - வைத்தியசாலையில் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

அங்குள்ள ஒரே ஒரு அப்போதிக்கரி மட்டும் சேவையாற்றி வருகிறார்.

ஆகவே நோயாளர்களின் வசதியை முன்விட்டு தொண்டர் வைத்தியர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

இப்படி அச் சங்கம் கேட்டுள்ளது. (இ-68)

# திருமலையைப் புனரமைக்க மூன்றாண்டுத் திட்டம்

## இணைப்புக் கமிட்டி அமைப்பு

திருகோணமலை, ஜூலை 22

திருகோணமலையில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக 'மாவட்ட புனர்நிர்மாண இணைப்புக்கமிட்டி' ஒன்று திருமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கமிட்டியில் மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்களும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

திருகோணமலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாண வேலைகளை ஒருமுகப்படுத்தி பாரிய திட்டமொன்றை ஏற்படுத்து முகமாக அண்மையில் இந்த மாவட்டக்கமிட்டி கூடியது.

அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின தலைமையில் கூடிய இக்கமிட்டிக் கூட்டத்தில் மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்களும், இணைப்பதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த கப்டன் எஸ். குரோவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அடுத்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் பற்றி கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. புகேந்திரனால் சகல இலாகா தலைவர்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட நகல் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக ஆராயப்பட்டது. (இ-150)

# மத சம்பந்தமான நூல்களை அனுப்பிவைக்குமாறு பூஸா இளைஞர் கடிதம்

காங்கேசன்துறை, ஜூலை 22

பூஸாவில்உள்ள தமிழ் கைதிகள் தம் அறிவை விருத்தி செய்ய மதசம்பந்தமான நூல்களையும், ஆங்கில அகராதியையும் வழங்கி உதவும்படி யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பூஸா முகாமில் 83 அம் ஆண்டில் இருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள அளவெட்டியைச் சேர்ந்த பாலகுமார் பாலரஞ்சன் என்பவர் யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரத்துக்கு அனுப்பிய கடிதத்திலேயே இப்படிக் கோரியுள்ளார்.

அவர் தம் கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

உளரீதியாகத் பாதிக்கப்பட்டுள்ள எமக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மத சம்பந்தமான நூல்களை அனுப்பி உதவினால் பெரும் உதவியாக இருக்கும்.

அத்துடன் ஆங்கில - தமிழ் அகராதி ஒன்றையும் அனுப்பி உதவவும்.

இப்படி அவர் கோரியுள்ளார்.

யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மதசம்பந்தமான நூல்களை பொதுமக்களிடம் இருந்து வரவேற்றுள்ளது. (இ-68)

## பாதிக்கப்பட்ட மீனவர் விவரம் திரட்டப்படுகிறது

வடமராட்சி ஜூலை 22

1987 ஜூலை அசம்பாவிதங்களால் வீடுகள் பாதிக்கப்பட்ட மீனவரின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

வடமராட்சியில் கடற்றொழில் அமைச்சினால் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு விவரக்கோவைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (இ-160)

# வடக்கு-கிழக்கு மக்களுக்கு மக்கள்வங்கி புதிய சலுகைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மக்கள் வங்கி வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு புதிய பல சலுகைத்திட்டங்களை அறிவிக்க உள்ளது.

இந்தப்புதிய சலுகைத் திட்டங்கள் வடக்கு-கிழக்குப் பகுதி மக்கள் வங்கியின் முக்கிய அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தத் தகவலை மக்கள் வங்கியின் வட பிரதேச முகாமையாளர் மு. கணேசசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சலுகைத் திட்டங்களாவன:-

★ புனர் நிர்மானப் பணிகளுக்காக புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் மிகக் குறைந்தவட்டிவீதத்தில்கடன்களை வழங்க உத்தேசிக்கப்பட்டு வருகிறது. இதற்கெனப் 10 கோடி ரூபாவரை கடன் வழங்கப்படும்.

★ கடந்த காலங்களில் மக்கள்வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் பல கடந்த 83 ம் ஆண்டின் பின்னர் திருப்பிச் செலுத்தப்படவில்லை. இந்த நிலையில் மக்கள் வங்கியில் கடன் பெற்றவர்கள் மீது வழக்குத் தொடுக்கவேண்டியது இதுவரை இருந்த நடைமுறை ஆகும். ஆனால் தற்பொழுது இந்த நிலை மாற்றப்பட்டு கடன் பெற்றவர்களின் கடன் தொகைக்குமுன்பு வழங்கப்பட்டதை விடக் குறைந்த அளவு வட்டி வீதம் 83 ஆம் ஆண்டின் பின் அறவிடப்படும்.

★ கடனைத் திருப்பிச் செலுத்த தவணை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (இ-9)

கொள்ளையர்கள் பொருள்களைப் பறிக்கத் தொடங்கியபோது

# ஒருவர் மோதிரத்தைக் கழற்றி தமது வாய்க்குள் போட்டார்

## பயணிக்கு ஏற்பட்ட அனுபவம்

வடமராட்சி, ஜூலை 22

கொள்ளையர்கள் எமது பொருள்களையும், நகைகளையும், அபகரித்த போது நான் எனது திருமண மோதிரத்தைக் கழற்றி வாய்க்குள் போட்டுக் கொண்டேன். இதனால் அதுமட்டும் தப்பியது.

வவுனியாப் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட மினிபஸ்களில் ஒன்றில் பயணம் செய்த மயிலிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆனந்தசங்கரி என்பவர் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 17 ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது,

ஒரே நேரத்தில் மூன்று மினிபஸ்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

சம்பவம்பற்றித் திரு. ஆனந்தசங்கரி கூறியதாவது:-

சம்பவதினம் அதிகாலை 3.45 மணி இருக்கும். ஈரப்பெரியகுளம் பிரதான சந்தியையும் தாண்டி ஒரு மைல் தூரம் பஸ் வந்திருக்கும்.

காட்டுக்குள் இருந்து வெளியே வந்த ஆயுதபாணிகளான சிலர் வீதியின் நடுவில் நின்று பஸ்ஸை மறித்தார்கள்.

அதைத் தொடர்ந்து வீதியில் மரக்குற்றிகள் போடப்பட்டன,

பஸ்ஸினுள் புகுந்து சாரதியை அவர்கள் வெருட்டினர். காட்டுக்குள் பஸ்ஸைச் செலுத்தும்படி உத்தரவிட்டனர்.

நித்திரையாக இருந்த பிரயாணிகளில் பலர் அப்போதுதான் விழித்தனர். சிலர் கூச்சலும் போட்டனர்.

சத்தம்போட்டால் சுட்டுவிடுவோம் என்று கொள்ளையர்கள் எச்சரித்தனர்.

எமது பஸ் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஏற்கனவே இரண்டு மினிபஸ்கள் காணப்பட்டன. அவற்றின் பிரயாணிகளும் அங்கு காணப்பட்டனர். தமது பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் காணப்பட்டார்கள்.

எமது பஸ்ஸினுள்ளும் கொள்ளையர்கள்ஏறினர் நான் எனது திருமண மோதிரத்தை வாயில் போட்டுக்கொண்டதால் மோதிரம் தப்பியது.

எனதுஏனைய உடைமைகளும், ரொக்கப் பணமும் பறிமுதலாகின. ஏனையோரிடம் பல ஆயிர ரூபா பெறுமதியான ரீ. வி., டெக், டிரான்சிஸ்டர் போன்ற பொருள்களும் பறிமுதலாகின.

பெண்களிடமும் குழந்தைகளிடமும் கூட நகைகள் பறிக்கப்பட்டன. பெண்கள், குழந்தைகள் அழுதபோது கெட்டவார்த்தைகளால் கொள்ளையர் ஏசினர்.

ஒரு வயோதிபரின் கையில் இருந்த மோதிரத்தைக் கழற்ற முடியாது போகவே அவரின் அரையில் இருந்த வெள்ளி அரைநாண் கொடியை அறுத்து எடுத்தனர்.

சில பெண்களின் தோடுகளைக் கழற்றியபோது அருவருப்பான முறையில் நடந்து கொண்டனர்.

பின்னர் 4.15 மணி அளவில் வாகனங்கள் மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்பட்டன.

நாம் யாழ். வரும் வழியில் அமைதிப்படை முகாம் ஒன்றுக்குச் சென்றுமுறையிட்டோம்

இப்படி அவர் கூறினார், (இ-160)

# நகை அணிய வேண்டாம்

## அடியார்களுக்கு வேண்டுகோள்

காங்கேசன்துறை, ஜூலை 22

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்துக்கு வரும் அடியார்கள் நகை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆலயத் தெற்கு வாசலில் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கிராமசேவையாளர்களும் அலுவலக உதவியாளர்களும் சேவையாற்றுகிறார்கள்.

உற்சவ காலங்களில் சாரணர்கள் சாரண ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையிலும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் திரு. அருந்தவராசா தலைமையிலும், தொண்டர் சேவையை மேற்கொண்டுள்ளனர்.

அமைதிப் படையின் மருத்துவ உதவிப் பிரிவும் தெற்கு வீதியில் இயங்கி வருகிறது. (இ-68)

## பதிபதீஸ்வரி இராசகோபுர அமைப்பு வேலை

யாழ்ப்பாணம், ஜூலை.22

புலோலி பசுபதீஸ்வர இராசகோபுர அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்றாகனபூர்வாங்கப்பணிகள் கோவில்நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் ஆலய அடித்தளம் ஆசிரியர் வி. சுப்பிரமணியம் என்பவரால் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் இடப்பட்டது.

தற்பொழுது அடியார்கள்பலர் ஒன்றுகூடி இராசகோபுரத்தைக்கட்டி முடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஆலய முகாமையாளர் திரு. வி. நாகராசா தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளைக் கடந்தவருடத்தில் இருந்து மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## தெற்கில் வீதித்தடுப்புக்கள்

கொழும்பு, ஜூலை 22

மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வீதித் தடுப்புக்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

தென் மாகாணக் கிராமங்களில் சாதாரண மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது [illegible] கின்றது. (இ-எ)


நிறையை கண்காணித்து உங்கள் சக்தியை நம்பிக்கையுடன் மீண்டும் பெற

போன்லக்

ஆடை நீக்கிய பால்மா அவுஸ்திரேலியாவிலிருந்து




விரைவாக கரையும் தன்மையுள்ள உடனடி போன்லக் பால்மாவை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

விநியோகஸ்தர்கள், மில்லர்ஸ் லிமிடெட் த.பெ. இல: 100, கொழும்பு - 1

1 கிலோ ரூ. 97/75



உயரிய உழைப்பு உச்ச இலாபம்



புறஉடற் கூட்டை மாத்தால் அமைத்துக்கரும் வசதியும் உண்டு.

அடித்தளம் ரூபா: 450,000/- முதற்கொண்டு.

லால் கொமெற் சுப்பர் லாரி

★ சுமை ஏறக 224" இடவசதி. 9½ தொன் பாரம் ஏற்கும் சக்தி

★ எரிபொருள் செலவீட்டில் அதிகண்டிப்புக் காட்டுவோரையும் திருப்திப் படுத்தும் அளவு சிக்கனம்.

★ லேலண்ட் அம்சமான உறுதிசெய்யப்பட்ட நீண்டகால உழைப்பு.

★ பராமரிப்பு அறிவுரை திருத்தவேலைகளுக்குத் தொழிற்சாலைப் பயிற்சி பெற்ற பொறியியலாளர் மற்றும் சிப்பந்திகளின் சேவை உதவி.

★ தேர்ந்தெடுக்கக் கொன்ஸ்ரன்ற்மெஷ் அல்லது மலை நாட்டுப் பகுதிக்கு உகந்த சிங்க்ரோமெஷ் என இருவகை கியர் முறைகள் உண்டு

லால் கொமெற்-நாளும் பணம் பெருக்க நம்பகமான பங்காளன்

நிதியக் கடன்/குத்தகைக் கடன் வசதிகள் பற்றி எம்மிடம் விசாரிக்கவும்

லங்கா அசோக் லேலண்ட் லிமிட.
38 - 40, எட்வட்ஸ் லேன், டுப்ளிகேஷன் வீதி, கொழும்பு 3.
(பௌத்தாலோகக மாவத்தச் சந்தியருகில்)
தொலைபேசி 502286.
லால் ஸ்பெயர் பார்ட்ஸ் சென்ரர்.
241, பஞ்சிகாவத்த ரோட், கொழும்பு 10.

GPL


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 89

1 வருட வகுப்பு

புவியியல் - க. குணராஜா, M.A.

சனி, ஞாயிறு - 2 மணி

ஆரம்பம் : 23-07-88

(C 5878)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. Saudi Arabia:
சவூதி அரேபியா:

## Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15. Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

WITH FOOD ALLOWANCE

Age - 21 - 49 years

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL.

(C 5869)



யாழ்ப்பாணக் கல்லூரி
தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.

## கட்டிட நிர்மாண பயிற்சி வகுப்புகள்

எமது இளைஞர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் "Care International" ஸ்தாபனத்தின் உதவியுடன் ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் ஆரம்பமாகின்றன.

மேசன்வேலையிலும், மரவேலையிலும் பயிற்சி பெற ஆர்வமுள்ள மாணவர்கள் உடனே விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

ஒழுங்கான பயிலுநர்க்கு நாளாந்த ஊக்குவிப்புப் படி வழங்கப்படும்.

- பணிப்பாளர்

(C 5826)



அரசாங்க அறிவித்தல்

# மரத்தளபாடங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் நிர்வாகத்திற்குட்பட்ட வைத்தியசாலைகட்குத் தேவையான மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன. வழங்க வேண்டிய பொருட்களின் பெயர், தகைமை, அளவு, தொகை என்பன போன்ற விபரங்கள் 29-07-88 இற்கு முன் பெற்று 04-08-88 காலை 10-00 மணிக்கு முன் இக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்படலாம். கேள்விப்பத்திரம் இடப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "மரத்தளபாடங்கட்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்படல் வேண்டும்.

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (C-5816)



# SCIENCE CENTRE

KARAVEDDY

## A/L 90
## O/L 88

(JULY பரீட்சை எடுத்த மாணவர்களுக்காக)

ஆரம்பம்: 23-07-1988 பி. ப. 3மணி

(5326)



# VACANCY

## FACTORY FOREMAN

ARE YOU A SKILLED PERSON ?
ARE YOU A MANAGER?

If yes, the opportunity that has risen in a well established Engineering Industry which is involved in production of one item with the scope to expand further may be yours.

We require a skilled person with previous experience in Foundry, Machine Shop and ability to manage people and also who is able to exhibit his skill, motivate others and function independently.

SALARY NEGOTIABLE.

TECHNICAL QUALIFICATION IS AN ADVANTAGE BUT NOT NECESSARY.

**Call in person with all relevant certificates and references on SUNDAY the 24th of JULY between 9.30 a.m. and 3.00 p.m. at**

No. 28, 3rd Cross Street,
JAFFNA.

Contact:
MR. A. J. A. SELVANAYAGAM

(C 5819)



# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

## A/L 89

கணக்கியல்: [1வருட வகுப்பு]

திரு. ஸ்ரீ

சனி, ஞாயிறு 7.30 - 9.30
(2 மணித்தியாலங்கள்)
[அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன]

## A/L 90

கணக்கியல் வகுப்புக்கள்
ஆரம்பமாகவுள்ளன.
விண்ணப்பங்கள் பதிவு செய்யவும்

(C 5814)


## சடலம் மீட்பு

மட்டக்களப்பு ஜூலை 22

அக்கரைப்பற்று நகரில் இயக்க மோதல் எதிரொலியாக கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் இச் சம்பவம் நடைபெற்றது.


SHAN ADVERTISING SERVICES
JAFFNA

விபரம்
விரைவில்
மேஜர் ஷண்
(5256)



## A/L 90

சனி, ஞாயிறு வகுப்பு

1.15:
பிரயோக கணிதம்
2.30:
தூய கணிதம்

ஆரம்பம்:
23. 7. 88

ஆசிரியர்:
திரு. ரவி மோகன்
யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(5106)



# ★ விக்னு ★

## டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L பிரிவு 5
Day Classes
(8-30 — 1-30)

ஆரம்பம்: 27-7-88

முக்கிய குறிப்பு:-

1. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
2. மாணவர்களின் நலன் கருதி O/L பயிற்சிப் பரீட்சை எம் நிறுவனத்தில் மட்டுமே இலவசமாக நடாத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும்.

(C-5836)



# பிரயாண ஒழுங்குகள்

குவைத், சவூதி அரேபியா, பஹ்ரைன்

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுடன் துரிதகதியில் பிரயாணம் செய்ய

இன்றே நாடுங்கள்

## கோல்டன் ரவல்ஸ்

- ✶ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
- ✶ எயர்போர்ட் கிளீனேர்ஸ்
- ✶ பாடசாலை கிளீனேர்ஸ்
- ✶ HOUSE MAID

மற்றும் பலதரப்பட்ட வேலைகள் எம்மிடம் உண்டு.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயம் தினசரி காலை 8.30 முதல் மாலை 5.00 மணிவரை திறந்திருக்கும்.

உங்கள் தேவையே
எங்கள் சேவை

தலைமைக் காரியாலயம்:

## கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

கிளை 2. கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
வன்னிச்சி கோவிலடி,
கைவேட்டி.

(C 5871)



THE EXPRESS INSTITUTE KOPAY

# A/L 90

## கணித வகுப்புகள்

BY திரு. வெக்டர்

சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| PURE | 1-00 - 2-00 p. m. |
| APPLIED | 2-00 - 3-00 p. m. |
| BASIC MATHS | 3-00 - 4-00 p. m. |

(கணித/விஞ்ஞான பிரிவினர் இருவர்க்கும்)

20-07-88 புதன்
பி. ப. 4.30 க்கு ஆரம்பமாகிவிட்டது.

BASIC MATHS
BY திரு. தயாளன்

சனி, ஞாயிறு — 12-00 மணி

(C-5900)


## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இ. பராசத்தி (தேவி)
(தென்மயிலை தெல்லிப்பளை)

தோற்றம்: 4-2- 1945
மறைவு: 22- 7- 1984

பாசத்தின் நினைவால் - இன்று
வேதனையடைந்தோம் - அம்மா
மகள் லாவண்யாவை காணுமுன்னே
காலவிதி வந்ததுவோ?

பாசமுள்ள அன்னை, தந்தை,
சகோதரர்கள்

கருமாரி மோட்டேஸ்
281/ A ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம். (5335)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
19-8-1935

முன்னவன் அடியில்
22-6-1988



திருமதி நவரத்தினம் இரத்தினமலர்

கோடானு கோடி கொடுத்துங் கிடைக்காத
ஏடான என் துணைவி
வீடாக என்றன் பேடாக நீ தந்த
வாடாத மகவு மூன்றும்
பாடாத பாட்டு, பயனற்ற பேச்சு
ஆடாத நடனமாய் போல், நாம்
ஓடாகி வாடவும் மாடாக உழைக்கவும்
ஆடல் அண்ணலை நாடினையே!
அம்மா என்றதுமே அன்புச்சிரிப்பு
அம்மா ஏன் என்ருலுமதற்குச் சிரிப்பு
சோறு அள்ளி ஊட்டும் போதென்ன சிரிப்பு
கூறுகக் கொல்லுதே நினைக்க உன் சிரிப்பு.
அக்கா வென்றழைக்க நீ ஏனக்கா என்பாய்
அக்கா தா உணவென்ன வாவன் நீ என்பாய்
எக்கா லங்காணுத இன்சுவைக் குவியல்
முக்கா லிமுன்வைத் துமுன்னின்று தருவர்
யார்?

உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்,
அன்புக் கணவன், மக்கள்,
உடன் பிறப்புக்கள், மருமக்கள்.
கலைவாணி அரிசி ஆலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (5252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.

**பொருள்:**
அறிவிற் சிறந்தவரின் முன் தாமும் அறிவிற் சிறந்தவராய்ப் பேச வேண்டும்; அறிவில்லாதவர் முன் தாமும் வெண்சுண்ணம் போல் அறிவில்லாதவராய் இருக்க வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22703
22-07-1988 த. பெ. இல. 23


## உடன் ரத்துச் செய்க

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளில், நிவாரண உதவிகளில் இருந்து வடபகுதி மீனவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைப்பதில்லை.

இலங்கை அரசாங்கத்தின் கடற்றொழில் அமைச்சு, மானிய அடிப்படையில் வழங்கி வந்த உதவிகளையும் கடந்த ஐந்து வருடங்களாக வடபகுதி மீனவருக்கு வழங்காது நிறுத்திவிட்டது.

மீனவர்களுக்கென வழங்கப்பட்டு வந்த விசேட உணவுமுத்திரை நிவாரணமும் இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

கடற்றொழில் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் அங்கத்தவர் கூட்டம் கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

அப்போது அங்கு சமூகமளித்திருந்த, மாவட்டத்தின் பல கிராமங்களிலும் இருந்து வந்த மீனவர்கள் மேற்கண்ட தங்கள் நிலைமைகளைத் தாமே எடுத்துச் சொன்னார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் முப்பத்தையாயிரம் மீனவர் குடும்பங்கள், தமது குடும்பத் தலைவர்கள் தொழில் செய்ய முடியாதிருப்பதால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலும் அதே கூட்டத்தில் வெளியானது. அதாவது சராசரி இரண்டுலட்சம் பேரின் நாளாந்த ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

1983 ஆம் ஆண்டிலிருந்தே வடக்குக் கிழக்கில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது. இப்போது அது முற்றாக ஸ்தம்பிக்கும் நிலையை அடைந்துவிட்டது. இத்தனைக்கும் மீனவர்கள் எவ்வித தவறும் செய்தவர்கள் அல்லர்.

கடல்வலயச் சட்டம். அதன்கீழ் மீன்பிடித்தடை. இந்தத்தடை கடந்த ஐந்துவருடங்களாகத் தொடர்ந்து மீனவர்களின் ஜீவனோபாயத்தைத் தடுத்து வருகிறது இடைக்கிடை மட்டும் தளர்த்தப்படுவதும் குறுகிய காலத்தில் மீண்டும் அமுல் செய்யப்படுவதுமாக கடல்வலயச்சட்டம் மீனவரின் வாழ்க்கையின் பரம எதிரியாகிவிட்டது.

பிரஸ்தாப கடல் வலயச் சட்டத்தால் இலங்கையின் வருவாயும், வெளிநாட்டுச் செலாவணியும் பெருமளவில் வீழ்ச்சிகண்டுவிட்டது. இதனை மீன்பிடி அமைச்சரும், மற்றும் அரசாங்க உயர்மட்டத்தினரும் அடிக்கடி வெளிப்படையாகவே கூறி வருகின்றனர்.

ஆனல் சட்டத்தை நீக்கவோ அல்லது அந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவோ அல்லது மாற்றுத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவோ இலங்கை அரசு 1983 தொடக்கம் 1987 ஜுலை வரையான நாலாண்டு காலத்தில் நினைத்தும் பார்த்ததில்லை.

அதற்கு முன்னர் ஊக்குவிப்பு முறையில் வழங்கி வந்த மான்ய உதவிகளைக் கூட நிறுத்தி விட்டது.

தமிழர் பொருளாதாரத்தை எல்லா வகைகளாலும் நலியச் செய்து, அவர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை பழுங்கடித்து விட வேண்டும் என்ற — நாம் இப்பத்தியில் அடிக்கடி சுட்டிடுக்காட்டி வரும் — அடிப்படைக் காரணமே தமிழ் மீனவர்கள் மீது விதிக்கப்படும் தடைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் காரணமாகும்.

1987 ஜுலைக்குப் பின்னரும் கடல் வலயச் சட்டம் சிறு இடைவெளிகளைத் தவிர்த்து தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனல் பாதிக்கப்பட்ட மீனவருக்கு நிவாரணம், நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதில் இந்தியாவும் அக்கறை காட்டியதாக இல்லை. இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தி உதவி செய்விக்கவும் இல்லை. அது முடியவில்லையெனின் தானாவது உதவியிருக்க வேண்டும். கடல்வலயச் சட்டத்தை நீக்கக் கோரி வடமராட்சியில் நடந்த பேரணியின் பின்னர், மீனவருக்கு நிவாரணம், நஷ்டஈடு வழங்குவதில் இரண்டு அரசுகளும் இழுபறிப்படும் நிலையும் அம்பலமானது.

மக்களின் ஜீவனோபாயத்துடன் விளையாடலாகாது. இந்த விடயம் மனிதாபிமானத்துடன் அணுகப்படவேண்டியது. இரண்டு அரசுகளும் நிவாரணமோ, நஷ்டஈடோ வழங்கப் போவதில்லையெனில் கடல் வலயச் சட்ட அமுலை உடனடியாக ரத்துச்செய்ய வேண்டும்.

மீனவர்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளும் அடிப்படை உரிமையை மறுப்பது அநீதியும் அதர்மமுமாகும்.

கறுப்பு இன நாடான

# நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்க தென் ஆபிரிக்க அரசு இணக்கம்!

## ஐ. நா. தீர்மானம் செயற்படுத்தப்படும்

வாஷிங்டன், ஜுலை 21

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்தை தென்ஆபிரிக்க அரசு ஏற்றுக்கொண்டு விட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

ஐ. நா. தீர்மானத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ஆராயும் மாநாடு அடுத்தமாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது, அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்களை விலக்கிக்கொள்வது பற்றிய விஷயத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக ஐ. நா. அதிகாரி தெரிவித்தார்.

அடுத்தமாதம் நடைபெறும் சுவிஸ் மாநாட்டில், கியூபன் துருப்புகளை விலக்கிக்கொள்வது சம்பந்தமான காலஅட்டவணையும் தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தென்மேற்கு ஆபிரிக்கப் பகுதி நாடு நமீபியா. நமீபியாவின் விடுதலை இயக்கமான சுவாப்போ ஸ்தாபனம், தென்ஆபிரிக்காவின் முடிவை வரவேற்றுள்ளது.

நமீபியா விஷயத்தில் கியூபா, அங்கோலா, தென் ஆபிரிக்க அரசுகள் கருத்து உடன்பாடு ஒன்றை அடைந்தது இதுவே முதற்தடவை என்று தென் ஆபிரிக்க வெளிநாட்டு அமைச்சர் பிக் போத்தா தெரிவித்தார். (எ)

# ஜெயலலிதா தொடங்கியுள்ள புதிய நாளிதழ்!

## பெயர் 'நமது எம். ஜி. ஆர்.'

சென்னை, ஜுலை 21

ஜெயலலிதா 'நமது எம்ஜி ஆர்' என்ற பெயரில் நாளிதழ் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

வெளியீட்டு விழா அண்மையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

முன்னாள் அமைச்சர் ஹண்டே விழாவுக்குத் தலைமை வகித்தார்.

ஆரம்பத்தில் ஜெயலலிதா 3 புறாக்களைப் பறக்க விட்டார்.

பின்னர் அவர் பேசுகையில் சொன்னதாவது;

எம். ஜி. ஆர். வாழ்ந்த காலத்தில் என்னைப் புதுடில்லியின் 'கையாள்' என்று கூறினார்கள்.

இன்று என்னை புதுடில்லியின் எதிரியாக சித்தரிக்கிறார்கள். பல கதைகளைக் கட்டி விடுகிறார்கள். உண்மை வெளிப்படும்போது துரோகத்தின் முகமூடி கிழியும். துரோகம் வென்றதாக வரலாறு இல்லை.

சிலர் கணக்குக் கேட்கிறார்கள். கணக்குக் காட்ட என்றுமே நாம் தயாராக இருக்கிறோம். கணக்கு பொதுக்குழு முன் வைக்கப்படும். எதையும் பேச இடம் இருக்கிறது. கணக்குக் கேட்க வேண்டிய இடம் பொதுக்குழுதான்.

கணக்குக் கேட்பவர்களைப் பார்த்து யாரும் பயப்பட வேண்டியதில்லை.

யார் உடன் வந்தாலும் வராவிட்டாலும் நம் லட்சியப் பயணம் தொடரும். யாருக்காகவும் நம் பயணம் நிற்காது. மீண்டும் எம் ஜி ஆர். ஆட்சி அமைக்கும் வரை நான் ஓயப்போவதில்லை.

இப்படி ஜெயலலிதா சொன்னார். (-எ)

### வெளி உலகில்

#### அமெரிக்காவில் சிவன்கோயில்

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் புறநகர்ப் பகுதியில் ஐந்து கோடி ரூபா செலவில் 14 ஏக்கர் நிலப்பரப்பில் சிவன் – விஷ்ணு கோயில் கட்டப்படுகிறது.

இரண்டு கட்டமாக ஆலயம் கட்டுகிறார்கள்.

முதல் கட்டப்பணி அடுத்த ஆண்டும் இரண்டாம் கட்டப்பணி 1991 ஆம் ஆண்டும் நிறைவு பெறும்.

இத்திருப்பணி சென்ற 10ஆம் திகதி ஆரம்பமானது. (எ)

#### ரஷ்ய குழு லண்டன் பயணம்

லண்டன், ஜுலை 21

பிரிட்டனில் உள்ள அமெரிக்க ஏவுகணைகளை பார்வையிட சோவியத் நிபுணர் குழு ஒன்று நேற்று லண்டன் போய்ச் சேர்ந்தது.

102 ஏவுகணைகள் பிரிட்டனில் உள்ள அமெரிக்கத் தளங்களில் உள்ளன. (எ)

கொமேனி சொல்கிறார்:

# யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவது என்பது நஞ்சு குடிப்பதிலும் மோசம்

தெஹ்ரான், ஜுலை 21

யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவது என்பது எனக்குப் பொறுத்தவரை நஞ்சு குடிப்பதிலும் பார்க்க மோசமானது.

ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனி நேற்று தெஹ்ரான் வானொலியில் உரை நிகழ்த்தியபோது இவ்வாறு கூறினார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை நிபந்தனையற்ற முறையில் ஏற்பதாக ஈரான் அறிவித்தபின்னர் ஆயத்துல்லா கொமேனி பேசியது இதுவே முதல் தடவை.

அவர் சொன்னதாவது:

இஸ்லாமியக் குடியரசின் நன்மை கருதியே யுத்த நிறுத்தத்துக்கு ஈரான் இணங்கியுள்ளது.

இதன் கருத்து யுத்தத்துக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது என்பது அல்ல.

கடைசி இரத்தம் இருக்கும் வரை ஈரானின் எதிரிகளை எதிர்த்து நான் போராடுவேன்.

இஸ்லாமியக் குடியரசின் நீண்டகால நன்மை கருதியே யுத்த நிறுத்தத்துக்கு நான் இணங்கினேன்.

ஈராக்குடனான யுத்தம் முடிந்து விடவில்லை. ஈராக்கின் எதிர்காலம் பாதுகாப்பற்ற நிலையில் தான் உள்ளது. ஈரானின் பரம எதிரிகள் அமெரிக்காவும் சவூதி அரேபியாவுமே.

கடவுளின் விருப்பத்துடன் உரிய காலம் வரும்போது சவூதி அரேபியாவின் அரசு பரம்பரையையும் அமெரிக்காவையும் ஈரான் பழி வாங்கியே தீரும்.

இப்படி ஆயதுல்லா கொமேனி சொன்னார். (ஓ-எ)

### பாறைக்குள் நாணயங்கள்

சென்னை, ஜுலை 21

கன்னியாகுமரிமாவட்டத்தில் காட்டாந்துறையில் பாறை ஒன்றைத் தொழிலாளர்கள் வெடி வைத்து உடைத்தபோது, அப்பாறைக்குள் இருந்து 200 பழங்கால நாணயங்கள் கிடைத்தன.

அவை நான்கு வகை நாணயங்களாக உள்ளன.

சில நாணயங்களில் ஒருபுறம் பாம்பும் மறுபுறம் நாமமும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த நாணயங்கள் ஆய்வு செய்வதற்காக கற்குளம் புதைபொருளாராய்ச்சி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-எ)

# விமர்சனம் வளர்ச்சி அடையாவிடில் சிறுகதைத்துறை வளர்ச்சி அடையாது

## 'ஒன்றுகூடல்' நிகழ்ச்சியில் உரை

யாழ்ப்பாணம், ஜுலை 22

உலகரீதியில் சிறுகதை விமர்சனம் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆனல் தமிழ்ச் சிறுகதை விமர்சனம் இன்னும் வளர்ச்சியடையவில்லை. விமர்சனம் வளர்ச்சியடையாவிட்டால் சிறுகதைத் துறை வளர்ச்சியடைய முடியாது.

கலாநிதி சபாஜெயராஜா இப்படிக் கூறினார்.

கலை இலக்கியக் கழகத்தினரின் பதினைந்தாவது ஒன்று கூடல் அண்மையில் யாழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

'சிறுகதைநாள்' என்ற தலைப்பில் நடைபெற்ற அன்றையநாள் நிகழ்ச்சிகளுக்கு கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

அன்றைய நாள் நிகழ்ச்சிகள் நான்கு அரங்குகளாக வகுக்கப்பட்டு நடைபெற்றன.

முதலாவது அரங்கத்திற்கு பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸும் இரண்டாவது அரங்கத்துக்கு ''குறமகள்'' அவர்களும் மூன்றாவதுஅரங்கத்திற்கு 'வரதர்' அவர்களும் நான்காவது அரங்கத்திற்கு 'கோகிலா மகேந்திரன்' அவர்களும் தலைமை வகித்தனர்.

முதலாவது அரங்கின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கலாநிதி சபா ஜெயராஜா உரை நிகழ்த்தினார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பொருளியலானது ஏனைய துறைகளிலும் பார்க்க அதிகம் வளர்ச்சியடைந்துள்ளது.

பௌதிகவியலில் உள்ள அதிகமான விதிகள் பொருளியல்துறையில் பயன்படுத்தப்படுவதே இவ்வாறான வளர்ச்சிக்குக் காரணம்.

இதுபோன்று ஏனைய துறைகளில் இருந்து தத்துவங்களை எடுத்து எமது விமர்சனத்திற்கு கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் எமது விமர்சனத்துறை முன்னேறும்.

இப்படி கலாநிதி சபா ஜெயராஜா கூறினார்–

பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி சிறப்புத் தொகுப்புரை வழங்குகையில்;

தமிழ் சிறுகதையின் தோற்றம் ஆரம்பகால வளர்ச்சி என்னமுறையில் வருகின்றது என்பதனை நாம் நோக்கவேண்டும்.

மேல்நாட்டு கருத்து நிலைக்கமையமைத் தொழில் புரட்சி, தனிமனிதத்துவம் ஆகியவற்றின் அடியாக வேவந்தது என்பதை நானும் கைலாசபதி அவர்களும் 1950– 60 களில் கூறியிருந்தோம். நிச்சயமாக அந்தக் கருத்தில் ஒரு மாற்றம் தேவை.

இனறுதான் எங்களுடைய சமூக அமைப்பில் தனிமனிதன் ஒரு சமூக அலகல்ல, தனி மனிதன் சமூக அலகாக இருப்பது மேற்கு நாடுகளில் தான்.

குடும்பத்தில் ஏற்படும் தாக்கங்கள், குடும்பத்தில் ஏற்படும் சிதைவுகள், நன்மைகள், குடும்பத்திற்குள்ளே தனி மனிதன் படுகின்ற அவலங்கள் தான் எமது சிறு கதையின் கருவாக அமைகின்றது.

இதன் காரணமாகத் தான் நான் நம்புகின்றேன் எமது மரபிலே குடும்பத்தின் அச்சாணியாக விளங்கும் பெண்கள் எமது புனைகதைகளிலே முக்கிய இடம் வகிக்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார்.

கருணையோகன், அ. ரவி, யேசுராஜா, சோ. பத்மநாதன், க. உமா மகேஸ்வரன், மயிலங்கூடலூர் பி. நடராஜன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

பண்டிதர் சி. அப்புத்துரை நன்றியுரை வழங்கினார். (இ-5)

யாழ் லயன்ஸ் கழகம்

# மாணவர்களிடையே

## பல்வேறு போட்டிகளை நடத்தும்

யாழ்ப்பாணம், ஜுலை22

யாழ் மாவட்டத்தின் பாடசாலைகளிடையேயும், மாணவரிடையேயும் பல்வேறு போட்டிகளை நடத்த யாழ் லயன்ஸ் கழகம் திட்டமிட்டுள்ளது.

இளஞ் சந்ததியினர் மத்தியில் பல்வேறு அருங்கலைகள் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தும் விதத்தில் பரதநாட்டியம், இசை, ஓவியம், பொதுஅறிவுப் போட்டி, விஞ்ஞானம், சமூகக்கல்வி, வணிகவியல், வரலாறு, கலாசாரம், [illegible] துறை போன்ற துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பரதநாட்டியம், இசை நிகழ்ச்சிகள், பொது அறிவு போட்டி என்பவற்றில் பாடசாலைகளும் கலந்து கொள்ளலாம்.

போட்டிகள் 15 வயதுக்கு உட்பட்டோர், அதற்கு மேற்பட்டோர் என இரண்டு வகைப் படுத்தப்பட்டு நடத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு செயலாளர் யாழ். லயன்ஸ் கழகம், 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. (இ-சி)

### சமய சந்நிதிகளில்

#### குருநகர் யாகப்பர் உற்சவம்

குருநகர், ஜுலை 22

குருநகர், புனித யாகப்பர் (சந்தியமையோர்) ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 5–45 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி அருளுரை வழங்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

24 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனையைத்தொடர்ந்து சற்பிரசாத சுற்றுப் பிரகாரம் நடைபெறும்.

25 ஆம் திகதி திங்கள் காலை 7–மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மாலை 5–30 மணிக்கு திருச்சொரூப ஊர்வலம் நடைபெற்று சொரூப ஆசிர்வாதம் வழங்கப்படும். (இ-51)

#### மனோன்மணி அம்பாள் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஜுலை22

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி உள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பௌர்ணமிதினம் வரை நடைபெறவுள்ள இந்த இலட்சார்ச்சனை தினமும் மாலை 3-30 மணிக்கு நவகலச அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

பௌர்ணமி தினத்தன்று 1008 சங்காபிஷேகம் நிகழ்ந்து இலட்சார்ச்சனைப் பூர்த்தி இடம்பெறும். (ஒ)

# 'பவன முத்தாசனம்' சிறப்புமலர் வெளியீடு

யாழ்ப்பாணம். ஜுலை22

'பவனமுத்தாசனம்' சிறப்புமலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

திரு எஸ். துரைராசா தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மாலை 4–45மணிக்கு விழா ஆரம்பமாகும்.

யாழ் ஆனந்தமார்க்க யோக சம்மேளன பிலிப்பைன் சுவாமிகள் யோக கலாநிதி ஆசார்ய விகிஸ்தானந்த அவதூத. மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி குரு வணக்கம் செய்ய, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

விழாவின் தலைவர், செல்வி புஸ்பா செல்வநாயகம், பிலிப்பைன் சுவாமிகள் ஆகியோர் ஆசனம் யோகம் பற்றிய விரிவுரை நிகழ்த்துவார்.

பிலிப்பைன் சுவாமிகளின் சிஷ்யர்களினல் ஊர்த்துவ தாண்டவ ஆசன நடனம் நிகழ்த்தப்படும்.

சிவத்திரு. சிவராசா நன்றியுரை வழங்குவார். (இ-க)

#### இன்று சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம் ஜுலை 22

யாழ் சைவபரிபாலன சபை இன்று வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை நடத்துகிறது.

நண்பகல் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் மகேசுர பூசை இடம்பெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்

விசேடபூசை, திருமுறைப் பாராயணம் உபந்நியாசம், திருமுறைப்பஜனை, தேவாரம் என்பன விழாவில் இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும்

பௌராணிகர் திரு. மு. தியாகராசா 'சுந்தரர் திருமுறையில் வாழ்க்கை நெறி' என்னும் பொருளில் உபந்நியாசம் நிகழ்த்துவார். (இ - க)

#### சுந்தரர் குருபூசை

உசன் அருள்மிகு முருகன் கோவிலில் இன்று 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுந்தரர் குருபூசை இடம்பெறுகிறது.

நாட்டில் யுத்த நிறுத்தம் அமைதி சமாதானம் வேண்டி இது நடத்தப்படுகிறது (இ-75)

#### பஹாய் நிகழ்ச்சி

பஹாய் சமய நிகழ்ச்சி ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு நெல்லியடி மகாத்மா வீதி, திரு. கே. வி. சுவர்ணராஜ் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (இ-75)

### ஒருதரம்மட்டும் பயன்படுத்தும் சிரிஞ்சுகள்

கொழும்பு ஜுலை 22

ஒரு தரம் ஊசி மருந்து ஏற்றியவுடன் தூக்கி எறிந்து விடக்கூடியது. சிரிஞ்சுகளை நாட்டில் அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே அமைச்சு இத்திட்டத்தைச் செயற்படுத்த உள்ளது.

அரசு மருத்துவமனைகளில் இத்திட்டம் முழுமையாக அமுலுக்கு வந்தவுடன் தற்போது பாவிக்கப் படும் சிரிஞ்சுகள் அகற்றப்பட்டு விடும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உதயன்

22 - 07 - 1988 வெள்ளிக்கிழமை



★ மிளகாய்த் தூள்
மஞ்சள் தூள்
வீட்டுப் பாவனைக்குரிய முறையில்
தயாரிக்கப்பட்டது
பாவனையாளர்,
மொத்த விற்பனையாளர்களுக்கு
விசேஷ கழிவுண்டு

அண்ணா தொழிலகம்
இணுவில்.



A/L 90

விஞ்ஞானம், வர்த்தகம், கலை
ஆரம்பம்: 23- 07- 88

**Bond Institution**

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5905)



**G.C.E.(A/L) பௌதிகவியல்**

ஆசிரியர்:

**N. பத்மநாதன் B.Sc. (Hons)**

A/L 90 ஆரம்பம்: 23-07-88

★ திருநெல்வேலி – சனி, ஞாயிறு 7.30 a.m.
★ மானிப்பாய் – புதன்,வியாழன் 6.30 a.m.

A/L 89 அடுத்த வகுப்பு முதல்
நீர்நிலையியல்

★ திருநெல்வேலி – ஞாயிறு 12 noon
– செவ்வாய் 4.30 p.m.
★ மானிப்பாய் – செவ், வெள்ளி 6.30 a.m.

(5255)



**★ குவைத் வேலைவாய்ப்பு ★**

★ 40 லேபரர்ஸ் உடன் தேவை
★ சம்பளம் K. D. 55– Rs. 6500/–
(உணவு, இருப்பிட செலவு உட்பட)
★ மிகவும் குறைந்த கட்டணம்
★ பாஸ்போட்டுடனும் ஒரு படத்துடனும்
உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பிரான்ஸ் போவதற்கு இருவருக்கு மட்டும்
உடனடி வாய்ப்பு.
விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

சிவா
6/3, மணிக்கூண்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
எமது கொழும்பு முகவர்:
கொன்ஸ்ட்ரக்சன் டெவலப்மன்ட்
கம்பனி – நுகேகொடை.

(5267)



**NEW-POLY INSTITUTE**
**Station Road,**
**Tellippalai.**

**A/L 90**

கலை வர்த்தக, விஞ்ஞான
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

அடுத்த வகுப்பு :

**26 - 07 - 1988**

செவ்வாய் காலை 9 00 மணி

தூய பிரயோக } கணிதம் — திரு. கமலசிங்கம்
இரசாயனவியல் — Mr. Bar
பௌதிகவியல் — திரு. நந்தகுமார்
விலங்கியல் — திரு. தம்பிராஜா
தாவரவியல் — திரு. குணசிலன்

பொருளியல் — திரு. கிருஷ்ணனந்தன்
வர்த்தகவியல் — திரு. தேவா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
தமிழ் இந்துநாகரிகம் } — திரு. பாலா
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்

குறிப்பு: A/L 89, கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புகள் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

- நிர்வாகி

(5118)


# ஆற்றல் உள்ள இளைஞரை உருவாக்குவது இன்றைய தேவை

## நூலகத் திறப்பு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை22

இதுவரை இருந்தது போல இனியும் கல்வி அறிவுடைய தமிழர் சமுதாயமே தேவை. இல்லையேல் ஆற்றல் உள்ள இளைஞர்களை உருவாக்க முடியாமற் போகலாம் அந்த நிலை ஏற்படக் கூடாது.

யாழ். வண்ணார் பண்ணைக் கிளை நூலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி நூலகத் திறப்புவிழா நேற்றுக் காலை நடைபெற்றது.

திரு. சிவஞானம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,–

நூலகங்கள் கல்வியுடன் தொடர்பானவை. தமிழரின் ஆதார மூலதனம் கல்வி தான். விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருக்கும் போது கூட கல்வியைப் பாதிக்காத வகையில் அது நடைபெற்று வருகிறது.

சமகாலச் சூழ்நிலையில் போஷாக்கின்மை, பயம் போன்றவற்றினுல் மக்களின் உடல் வளர்ச்சி உளவளர்ச்சி பாதிக்கப் படக்கூடிய ஆபத்து உண்டு.

இதனுல் எங்கள் கல்விமூலதனம் பாதிக்கப்படலாம். தற்போதைய போராட்டம் நீண்டகால போராட்டமாக முதிர்ச்சி அடையக்கூடிய நிலை இருப்பதனுல் தொடர்ந்தும் கல்வி அறிவுடைய சமுதாயம் உருவாக்கப்படாவிட்டால் போராட்டத்திற்கான ஆற்றல் உள்ள இளைஞர்கள் எதிர் காலத்தில் தோற்றுவிக்கப்படாமல் போகலாம் இப்படிச்செய்வதற்கானமறைமுகநடவடிக்கைகளை எமக்குஎதிரானவர்கள்மேற்கொள்ளலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்படாது கல்வியைப் பாதுகாக்க வேண்டியது எமது மக்களின் கடமை,பொறுப்பு.

யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதை அடுத்து எம்மிடையே ஒரு நல்ல நூலகம் இல்லாதது பெரும் குறையே எனினும் கிளை நூலகங்களை நிறுவி ஓரளவுக்கேனும்அந்தக் குறையை நிவர்த்தி செய்துள்ளோம் என்றூர்.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜா தமதுரையில்: நூலகங்கள், நம் எதிர்கால சந்ததியை நற் பிரஜைகளாக்கும் என்றூர். அவர் நூலகத் திறப்பு விழா ஞாபகார்த்தமாக பல்வேறு மரங்களை அன்பளிப்புச் செய்து நூலக வளவில் அவற்றை நட்டும் வைத்தார்:

மேலும், திரு, சோமகாந்தன், திரு. எஸ். ரி. தியாகராஜா, திரு. நாராயணசாமி ஆகியோரும் விழாவில் உரையாற்றினர். (அ–க)

### நிலக்கண்ணி..

(1ம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது தரைக் கண்ணிவெடி முன்கூட்டியே வெடித்தது.

சந்தேக நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். அந்த இடத்தில் 6 அடி ஆழமான பாரிய குழி ஒன்று ஏற்பட்டது.

200 மீட்டர் வயரும் ஏராளமான டோர்ச் பட்டரிகளையும் அந்த இடத்தில் இருந்துபொலிஸார் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ–எ)

### பஸ்ஸை...

[1ம்–பக்கத் தொடர்ச்சி]

திய நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

பஸ் நடத்துனரிடம் இருந்து காணமற்போன 3,200 ரூபாவையும், கண்ணுடி சேதமாக்கப்பட்டதால் ஏற்பட்ட நஷ்டப் பெறுமதி 425 ரூபாவையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் செலுத்துமாறு விசாரணை மேற்கொண்ட இந்திய இராணுவ அதிகாரிகள் பணித்தனர்.

அதற்குஇணங்க அவர் 3,625 ரூபாவை வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் செலுத்திஞர். சண்டித்தனம் புரிந்த நபர் தனியார் பஸ் ஒன்றின் சாரதி எனத் தெரியவந்தது. (ஒ–10)

## உணவு முத்திரை விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 22

யாழ். செயலகத்திலிருந்து உணவு முத்திரை விநியோகம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

சகல பகுதிகளுக்குமுரிய உணவு முத்திரைகள் விநியோகிக்கத் தயாராக இருந்த போதிலும், பல உதவி அரசாங்க அதிபர்கள் உணவு முத்திரைகளை வந்து பெற்றுக்கொள்ளவில்லை எனச் சொல்லப்பட்டது (ஒ-9)

### கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பொருள்களும் அடங்கி இருந்தன.

உரியவர்கள் மேற்படி பொருள்களை எம்மிடம் இருந்து பெற்றுச் சென்றுள்ளனர்.

பிடிபட்ட கொள்ளையரிடம் இருந்து போலித் துப்பாக்கிகள், வாள்கள் என்பன எம்மால் கைப்பற்றப்பட்டன.

விரைவில் இன்னும் பலர் கைது செய்யப்படலாம். அதன் மூலம் இன்னும் பல கொள்ளைகள் அம்பலத்துக்கு வரும்– என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### நிவாரண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் தனியார் அரிசி ஆலையில் தொழில் புரிந்து வந்தார்.

தாயாருடன் சென்று நிவாரணப்பணம் பெற்றுக்கொண்டு வீடு திரும்பும் வழியில் வாகனம் ஒன்றில் வந்தவர்களால் சுடத்தப்பட்டார்.

இவர் பெற்ற நிவாரணப்பணம் தாயிடம் இருந்ததால் அது அவரது இறுதிச் சடங்குச் செலவுக்கே பயன்படுத்தப்பட்டது. (ஒ–21)

### விடுதலையான....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டும்.

★ நீர்கொழும்பு சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருக்கும் திருமலையைச் சேர்ந்த ஆறு (6) யுவதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ முகாம்களில் இருந்ததனுல் தங்கள் வேலைகளை இழந்தவர்களுக்கும், ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாதிருந்தவர்களுக்கும் மீண்டும் வேலை கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

இக்கோரிக்கைகளை முன்வைத்து திரு. ரி. சிவராசா உட்பட வேறு பலரும் உரையாற்றினர்

பிரிகேடியர் கொப்பேகடுவ அங்கு உரையாற்றியபோது—

நிவாரணப் பணமான 2000/ ரூபா சகலருக்கும் வழங்கப்படுமென்றும், நீர்கொழும்புச் சிறைச்சாலையிலுள்ள யுவதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும், வேலை இழந்தவர்கள், மற்றும் ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாதிருந்தவர்கள் தொடர்பாக பாதிக்கப் பட்டவர்கள் தனித்தனியாக விண்ணப்பித்தால் முடிந்தவற்றை செய்து தரமுடியும்—என்று கூறினர். (ஒ–150)

### சிறையில்....

[1ம்–பக்கத் தொடர்ச்சி)

படும்.

இவ்வாறு. கணக்கிடப்படுவதற்கான படிவங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு அரச அதிபருடாக புனர்நிர்மாண அமைச்சுக்கு அனுப்பப்பட்டு நிவாரண உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

விடுதலைசெய்யப்பட்ட மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு தற்பொழுது இந் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனுல் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இவ் உதவிகள் இதுவரை வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது. (ஒ – 5)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சுப்பர் வேலுப்பிள்ளை

திரு. சுப்பர் வேலுப்பிள்ளை 20–7–88 இல் காலமானுர். இவர் திரு. திருமதி சுப்பரின் அன்பு மகனும் மார்க்கண்டுவின் சகோதரரும், மார்க்கண்டு சரஸ்வதியின் மைத்துனரும், சிவஞானம் (அண்ணு தொழிற்சாலை), சிவசூரியன் (நோர்வே), சிவப்பிரகாசம் (ஆசிரியர் கிளிநொச்சி மகாவித்தியாலயம்), சிவதாசன் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), சிவமலர் (ஜெர்மனி), சிவனேஸ்வரி (ஜெர்மனி), சிவசரணம், சிவசோதி ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும், இந்திராணி, தவராணி, (ஆசிரியை கனகபுரம் மகாவித்தியாலயம்), வசந்தி (யாழ். பல்கலைக்கழகம்), புஸ்பலிங்கம் (ஜெர்மனி), சிவம் (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனுரும், வாகினி, நவநீதன் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னுரின் பூதவுடல் மார்க்கண்டுவின் இல்லத்திலிருந்து 22–7–88 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இணுவில். தகவல்:
சகோதரன் மார்க்கண்டு

(5264)

### திருமதி மேரிபிலோமினு செபஸ்தியாம்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த மேரிபிலோமினு 20–7–88இல் காலமானுர். இவர் செபஸ்தியாம்பிள்ளை (உஷாவிற்பனையாளர், யாழ்ப்பாணம், முன்னுள் கிராமசபை உபதலைவர் அல்லைப்பிட்டி, அரசாங்க இணக்க சபைத் தலைவர் அல்லைப்பிட்டி) அவர்களின் அன்பு மனைவியும், செறின்மேரி சியாமளா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), அன்ரோனயினஸ் (ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பேதுரப்பிள்ளை மேரிப்பிள்ளை (பேக்கரி நானுட்டான்) தம்பதிகளின் புதல்வியும். மேரிமாகிறேட் (தங்கப்பொன்), சூசைப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், மரியாம்பிள்ளை (A. P. C. பாண்டியன் குளம்), சித்திரா, அக்கினேஸ், பிரான்சிஸ் ஆகியோரின் மைத்துனியும், தனம் (உஷா விற்பனையாளர் – பண்டத்தரிப்பு), தனேஷ், தருனம் ஆகியோரின் சிறியதாயாருமாவார். அன்னுரின் நல்லடக்கம் சனிக்கிழமை காலை 9–00 மணிக்கு சில்லாலை சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
ம. இக்னேசியஸ்

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

((5261)

### திருமதி. சரஸ்வதி வீரசிங்கம்

திருமதி சரஸ்வதி வீரசிங்கம் 20 –7– 88 புதன் கிழமை கொழும்பில் காலமானுர். இவர் காலஞ் சென்ற பிரபல வர்த்தகரும் கொழும்பு – ஐந்துலாம்புச்சந்தி சரஸ்வதி ஸ்டோர்ஸ் உரிமையாளர் க. இ. வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், கலட்டி சினியர் துரையப்பா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சந்திராதேவி, புஸ்பராணி சூரியகுமார், வீரலட்சுமி, சந்திரகுமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் பரஜபசிங்கம் (வவுனியா, கச்சேரி), சுந்தரலிங்கம் (கொழும்பு கிறிலைன்ஸ் வங்கி) ரஞ்சித்குமார் (பெருந் தெருக்கள் திணைக்களம், மன்னுர்), ஆகியோரது அன்பு மாமியாரும் தயாளினி, சுஜாதா, கஜன், சுகந்தி: ஆர்த்திக், தனுசி, ஆகியோரது பாட்டியுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் உடுவில் தெற்கு, பாலாவோடையில் உள்ள அவரது இல்லத்தில் 23–ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றூர்,உறவினர்கள். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ.சூரியகுமார்.

பாலாவோடை,
உடுவில்,

(5269)

### திரு. M. வில்லவராயர்

திரு. M. வில்லவராயர் (Engineer) 21ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை காலமானுர். அவர் ஐயனுர் கோவிலடி காலஞ்சென்ற மாணிக்கவாசகர் தம்பதிகளின் மூத்த மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவனும், ஸ்ரீராம் Executive Ceylon Tobacco Company Kandy), ஆனந்தராம் (Engineer Canada), ரேணுகா (Canada), மீரா ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார். அன்னுரின் பூதவுடல் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் பெருமகன் கு. கமலகுமாரின், பொன்னையா வளவு, ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காகச் சோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும், உற்றூர், உறவினர் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

[5271]

### திரு. நாகலிங்கம் சந்தனராஜா

இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதனை மேற்பார்வையாளர் (S.P.H.I.) திரு. நாகலிங்கம் சந்தனராஜா அவர்கள் 21–07–88 வியாழக்கிழமை காலமானுர். இவர் சிவபுராதனியின் அன்புக் கணவரும், தவராஜா, ஜெயராஜா, சிவறஞ்சினி, சிவராஜா, கிருஷ்ணராஜா, ரட்ணராஜா சிறீஸ்கந்தராஜா, சந்திரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சந்திரா, சுசிலா, செல்வநாயகம், நீலா மாலதி ஆகியோரின் மாமனுரும், சுவேந்தினி. சுகிர்தரூஜ், செல்வறஞ்சினி. சத்தியபவன் ஆகியோரின் பேரனுருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இல, 586/1, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடியில் உள்ள அன்னுரின் இல்லத்தில் 24–07–88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று: தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றூர். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்;
ஸ்ரீ ஸ்கந்தராஜா

[5123]

### செல்வி மாணிக்கம் தசந்தி

இல 14, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி மா. தசந்தி அவர்கள் 21–07–88 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வ. மாணிக்சம், திருமதி மா. சிவபாக்கியம் அவர்களின் ஐந்தாவது மகளும், திரு. மா. சுயேஸ்கரன், (சுகந்தன் பிரான்ஸ்), த. சுகந்தி, வசந்தி. மா. டசிகரன், மா. சதானந்தி ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு. வ. தவகுலசிங்கம் (இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவை மன்றம், யாழ்ப்பாணம்) அவர்களின் மைத்துனியும், செல்வி த. சுஜேக்கா, செல்வன் த. சுஜிதன் அவர்களின் சிறியதாயுமாவார்.

அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 22–07–88 இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என அறியத்தருகின்றேம்.

தகவல்: வ. தவகுலசிங்கம்.
14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

### சுப்பிரமணியம் அசோகன்

உரும்பிராயைச் சேர்ந்த சுப்பிரமணியம் அசோகன் அமெரிக்காவில் காலமானுர். இவர் உரும்பிராய் தெற்கு வேம்பன் ஒழுங்கையைச் சேர்ந்த திரு. திருமதி சுப்பிரமணியத்தின் அன்பு மகனும், அனுசூயா (London) பார்த்திபன் (London) ஆதித்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார் இவரது பூதவுடல் அமெரிக்காவில் தகனம் செய்யப்படும் உற்றூர் உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேம்.

தகவல்:
எஸ். சுப்பிரமணியம்

வேம்பன் ஒழுங்கை
உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்.

(5122)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 22 – 07 – 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday 22nd July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org